செ.வெ.எண்:45/2021 நாள்:19.08.2021

**பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரடியாக வருவதை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்கள் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் 23.08.2021 முதல் தங்களது மனுக்களை அளிக்கலாம். மாவட்ட ஆட்சியரின் மின் அஞ்சல் (collrtup@nic.in) வழியாகவும் மாவட்ட ஆட்சியரின் கைபேசிஎண் (9700041114) வாட்சப் வழியாகவும், பொதுமக்கள் தங்களது குறைகளை தெரிவிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!**

திருப்பூர் மாவட்டத்தில், பொதுமக்களின் குறைகளை களைய பிரதிவாரம் திங்களன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும் நாளில் பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டுவந்தது. கொரானா வைரஸ் **(covid-19)** தொற்று காரணமாக ஊரடங்கு உத்திரவு மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரடியாக வருவதை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்கள் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் **23.08.2021 முதல்** தங்களது மனுக்களை அளிக்கலாம். மாவட்ட ஆட்சியரின் மின் அஞ்சல் (collrtup@nic.in) வழியாகவும் மாவட்ட ஆட்சியரின் கைபேசிஎண் **(9700041114)** வாட்சப் வழியாகவும், மனு அளிக்கலாம் மேலும் பொதுமக்கள் தங்களது புகார்களை இதற்கென தொடங்கப்பட்டுள்ள **(0421-2969999)**என்ற தொலைபேசி எணணில் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தங்களது குறைகளை பிரதிவாரம் திங்கட்கிழமை தோறும் **காலை 10.30 முதல் பிற்பகல் 1.00 மணி** வரை தெரிவிக்கலாம். பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் குறைகள் குறித்து சம்மந்தப்பட்டதுறை அலுவலர்கள் மூலம் நிவர்த்தி செய்திடும் வகையில் விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். திருப்பூர் மாவட்டத்தில் கொரானா நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு **23.08.2021முதல் மறு அறிவிப்புவரும் வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரில் மனுக்கள் பெறப்பட மாட்டாது.** எனவே, பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**